

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (22.6.2023) தலைமைச் செயலகத்தில், மாநில சட்ட ஆணையத்தின் தலைவர் நீதியரசர் சி.நாகப்பன், உறுப்பினர்கள் நீதியரசர் என்.ஆதிநாதன், எஸ்.தீனதயாளன் ஆகியோர் சந்தித்துப் பேசினார்கள்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (22.6.2023) தலைமைச் செயலகத்தில், மாநில தகவல் ஆணையத்தின் புதிய உறுப்பினர்களாகப் பொறுப்பேற்றுக் கொண்ட பி. தாமரைக் கண்ணன், இ.கா.ப., (ஓய்வு), ஆர். பிரியாகுமார், டாக்டர் கே. திருமலைமுத்து, பேராசிரியர் முனைவர் எம். செல்வராஜ் ஆகியோர் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்கள்.

திண்டுக்கல் மாவட்டம்

# ஆத்தூர் தொகுதியில் திட்டப்பணிகள்!

## அமைச்சர் இ.பெரியசாமி தொடங்கி வைத்தார்!

ஆத்தூர், ஜூன் 23 -

திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கிராமங்களில் நேற்று முன்தினம் (21.06.2023) நடைபெற்ற நிகழ்ச்சிகளில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி கலந்துகொண்டு, ரூ.42 இலட்சம் மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகளை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்து, ரூ.89 இலட்சம் மதிப்பிலான புதிய திட்டப் பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

அதன்படி, ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர், பாறைப்பட்டி ஊராட்சி கெண்டிச்சம்பட்டி கிராமத்தில் மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் ரூ.70 இலட்சம் மதிப்பீட்டில் கெண்டிச்சம்பட்டி முதல் வண்ணம்பட்டி வரை சாலை மற்றும் பாலம் அமைத்தல் பணிகளை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து, சித்தையன்கோட்டை பேரூராட்சி அழகர் நாயக்கன்பட்டியில் ரூ.10 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட நாடகமேடை, செட்டியப்பட்டி ஊராட்சியில் ரூ.8 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்ட நாடகமேடை மற்றும் ரூ.23.57 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட ஊராட்சி மன்ற கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்து, ரூ.18.95 இலட்சம் மதிப்பிலான சாலைப் பணிகளை தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சிகளில் ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி பேசியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முயற்சியினால் தமிழகத்தில் சாலை மேம்பாட்டுத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. தமிழகம் முழுவதும் 10,000 கி.மீட்டர் அளவிற்கு சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதில் திண்டுக்கல் மாவட்டத்தில் அதிகளவிலான நிதி ஒதுக்கீடு பெறப்பட்டு சாலை மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மயானத்திற்கு செல்லும் சாலைகள் சீரமைக்கப்பட்டு வருகின்றன.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மகாத்மாகாந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உறுதித் திட்ட பணியாளர்களுக்கு மழைக்காலத்திற்கு முன்னர் அதிகளவிலான பணிகளை மேற்கொண்டு பணி வாய்ப்புகள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதேபோல் ஏழை, எளிய மக்களுக்கு வீடு வழங்கும் திட்டப்பணிகளும் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அரசின் திட்டங்கள், அனைத்துத் தரப்பு மக்களுக்கும் கொண்டு சேர்க்கும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு செயல்பட்டு வருகிறது, இன்றைய நிகழ்ச்சிகளில் மொத்தம் ரூ.42 இலட்சம் மதிப்பிலான முடிவுற்ற திட்டப் பணிகள் பொது மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டுள்ளன. ரூ.89 இலட்சம் மதிப்பிலான புதிய திட்டப் பணிகள் அடிக்கல் நாட்டி தொடங்கி வைக்கப்பட்டுள்ளது என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்ச்சிகளில், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் திருமதி மு.மகேஸ்வரி முருகேசன், ஆத்தூர் வட்டாட்சியர் வடிவேல் முருகன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.



திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியம், பாறைப்பட்டி ஊராட்சி, கெண்டிச்சம்பட்டி கிராமத்தில் ரூ.70 இலட்சம் மதிப்பிலான சாலை மற்றும் பாலம் அமைப்பு பணிகளை ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி நேற்று முன்தினம் (21.06.2023) அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார். அருகில் ஆத்தூர் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி மு.மகேஸ்வரி முருகேசன், ஆத்தூர் வட்டாட்சியர் வடிவேல் முருகன் உட்பட பலர் உள்ளனர்.

